

ஆதாரம்:
www.cbcmsb.org

திருத்தம்:
அருள்பணி யூஜின்
இயக்குனர் மாமறைமாவட்ட
மேய்ப்புப்பணி மையம் (API)

மின்னஞ்சல்:
apidirectorkl@gmail.com

INTERNAL CIRCULATION ONLY

BUL 33/2023

**மலே ியாவில் உள்ள ஒன்பது மறைமாவட்டங்களில் அடையாளம் காணப்பட்ட 7 முக்கிய பகுதிகள்**

1 **அருள்பணியாளர்களுடன் உறவு:** அவர்களின் அர்ப்பணிப்பு, இறைவேண்டல், கருனை, ஆர்வம் மற்றும் தலைமைத்துவ குணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. அதிகாரத்தில் உள்ள சவால்கள், குருத்துவம், தன்னிச்சையான முடிவுகளை எடுப்பது, வசதிபடைத்தவர்கள் மற்றும் செல்வாக்கு மிக்கவர்களிடையே காட்டும் ஒருசார்புநிலை, அவர்களின் குடும்பத்தினரோடு கொண்டுள்ள ஆர்வமிக்க உறவு மற்றும் அருள்பணியாளர்களுடைய ஊக்கம் கொண்ட மறையுரைகள்.

2 **ஆன்மீக அக்கறை:** திருப்பலி, சமூகம் மற்றும் நம்பிக்கை ஆகியவற்றில் புதுப்பிக்கப்பட்ட உணர்வு. தொற்றுநோய்க்குப் பிறகு இது தீவிரமாகத் தொடரவேண்டும். இறைஅழைத்தலைப் பற்றிய அறிவிப்பு செய்தல்.

3 **நம்பிக்கை மற்றும் உருவாக்கப்பயிற்சிகள்:** மறைபோதகர்களின் நம்பிக்கைப் பயணத்தில் தீவிரமாக கவனம் எடுத்து குறிப்பிட்ட அம்சங்களை மதிப்பாய்வு செய்தல், மறைபோதகத்திலும், புகுமுக வகுப்பின் பயணத்திலும் பெற்றோர்களே முதல் மறைக்கல்வி ஆசிரியர்கள். இயேசுவின் இரக்கத்தின் அனுபவத்துடன் பாலியல் தொடர்பான சிக்கல்களில் தீர்வுகாண கருத்தரங்குகள் தேவை.

4 **விளிம்புநிலையில் இருப்போர்:** புதிதாக வருபவர்களுக்கு மேய்ப்புப்பணி அக்கறை தருவது, முதியோர், சுற்றுப்புறங்களில் இருப்போர், பாதிக்கப்பட்டோர், காயமடைந்தவர்கள், மாற்றுத்திறனாளிகள், புலம்பெயர்ந்தோர், பூர்வீக குடிமக்கள், "புதிய ஏழைகள்" அரசு சாரா நிறுவனங்களோடு இணைந்து பிற சமயத்தாரோடு நமது ஒத்துழைப்பு தேவை.

5 **இளையோர்:** அவர்களை ஏற்றுக்கொள்ளுதல்.. முடிவுகளை எடுப்பதில் அவர்களையும் இணைத்துக்கொள்ளுதல், அவர்களின் உடல் உழைப்பைக் காட்டிலும் அவர்களிடமும் கருத்துகள் கேட்க வேண்டும். திருஅவையில் இளைஞர்கள் வேரூன்றி இருக்கவும், உருவாக்கவும், அவர்களிடையே ஈர்ப்பை உண்டாக்கவேண்டும்.

6 **கிறிஸ்துவ சபைகள் மற்றும் சமயங்களுக்கிடையே எடுக்கப்படும் முன் முயற்சிகள்:** ஆலோசனைகள் அதிகரிக்கப்பட வேண்டும். அவரவர்களுடைய நம்பிக்கை மற்றும் பழக்கவழக்கங்களைப் பற்றிய அடிப்படைக் விசயங்களில் பணியாற்றுவது அவசியம். தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவது, சமய தீவிரவாதத்தை எதிர்கொள்வதில் குரல் கொடுப்பது, ஊழல் பிளவுப்படுத்தும் அரசியலுக்கு எதிராகப் போராட்டப் பிரச்சாரம் தேவை.

7 **தலைமைத்துவம், அதிகாரம் மற்றும் இணைந்து செயல்படுதல்.** செயல்திறனுள்ள திருஅவையாக இருப்பதே நமது நோக்கம். மேய்ப்புப்பணி உள்ள ஊழியனாக இருப்பதை நோக்கி உருவாக்கம், ஒருசார்பாக இருப்பதிலிருந்து வெளிவருதல், அதிகாரப் போராட்டங்களை எதிர்கொள்ளுதல். நிதிநிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்பெடுத்துக்கொள்ளுதல், மறைமாவட்டங்களுக்கிடையே வளங்களைப் பகிர்ந்தளித்தல், வெளிப்படையாகச் செய்தல். பெண்களின் பங்கு மற்றும் அக்கறை சவால்களை எதிர்கொள்ளுதல்.


12 & 13 ஆகஸ்ட் 2023

# Newbec

NEW WAY OF BEING CHURCH

ஆண்டின் பொதுக்காலம் 19ம் ஞாயிறு


## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஒன்றிப்பு (உள்ளடக்கியது) பங்கெடுப்பு, (படைப்பாற்றல்) மறைத்தூது (உறவுகளை இணைத்தல்)

மாதாந்திர கருப்பொருள்:
புதுப்பித்தலை நோக்கிப் பயணித்தல்

மாதாந்திர நிகழ்வு:
அஜிர்ணமெந்தோ (மறுமலர்ச்ி 1976)

# மலே ியா சிங்கப்பூர் மற்றும் புருனை நாடுகளின் மாநாடாக மற்றும் திருஅவையாக ஆயர்மாமன்றத்தில் நமது பயணம்

**மலேசியா, சிங்கப்பூர் மற்றும் புருனையின் கத்தோலிக்க ஆயர்கள் மாநாட்டின் 12 பக்க அறிக்கையின் தொகுப்பின் சுருக்கம் தரப்பட்டுள்ளது. (CMCMSB) இரண்டு பாகங்கள் கொண்ட அறிக்கையின் முதல் பகுதி இது.**

இந்த மாநாட்டில் 11 மறைமாவட்டங்களிலிருந்து 84,739 பதில்கள் பெறப்பட்டன. மகிழ்ச்சி, நம்பிக்கை கருத்துகள்., எண்ணங்கள், அக்கறைகொண்ட கருத்துகள், குறைகள், பேசுவதற்குப் பயம் போன்ற உணர்வுகள் அந்தந்த மறைமாவட்டங்களின் கூட்டு அனுபவமாக இந்த மாமன்றப் பயணங்களில் வெளிப்படுத்தபட்டன. நம்முடைய CMCMSB இல் உள்ள மறை மாவட்டங்களில் ஒருங்கிணைந்த அனுபவங்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன.

- திருஅவைக்கு ஒவ்வொருவரும் பொறுப்பு.
- ஒன்றிப்பு - பங்கெடுப்பு - மறைத்தூதின் பாதையில் முன்னோக்கிச் செல்லுதல்.